புரட்டாதி ~ ஐப்பசி
2012

# நீங்களும் எழுதலாம்

நீங்கள் - 04 எழுத்து -23

23



தடைகளைத் தகர்த்து
தகவுகளைத்தேடி

இருமாத கவிதை இதழ்

NEENKALUM EZHUTHALAM
(Poetry Magazine)

விலை 25/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம் – 23

செப்டெம்பர் – ஒக்டோபர் 2012

**ஆசிரியர்.**

**எஸ்.ஆர். தனபாலசிங்கம்**


படைப்பாளிகள்

எஸ்.முத்துமீரான்
நீ.பி.அருளானந்தம்
தியவித்ரன்
மாணிக்கவாசகம்
அஷ்ரபா நூர்தீன்
திருமலையானந்தலிங்கம்
எஸ்.தர்விஜித் நந்தகுமார்
வி.ஆர்த்திகா
பெ.பத்மபிரஷன்
வீரப்பதி விநோதன்
தீரன்நௌசாத்
எஸ்.ஆர்.தனபாலசிங்கம்

ஜெனிதாமோகன்
மருதூர் ஜமால்தீன்
நீலாபாலன்
கெஜதர்மா
விஷ்வமித்திரன்
ஜெகதீஸ்வரிநாதன்
சௌ.சந்திரகலா
தீபிகா
க.யோகானந்தன்
சூசைஎட்வேட்
வேல்நந்தன்
சுகர்ணன்

பதிவுகள் :
வாசகர் கடிதம் :
மூலமும் பெயர்ப்பும் : சி. சிவசேகரம்

---

வடிவமைப்பு : பெ.பத்மபிரஷன்
அட்டைப்படம் : கே.ஶ்ரீதரன்

---


தொடர்புகளுக்கு

**'நீங்களும் எழுதலாம்'**

**103/1, திருமால் வீதி, திருகோணமலை**

**தொ. இல. : 0778812912**

**0262220398**

E-mail : neenkal@yahoo.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்திரம் – அவதந்திரம்

பல்லின பன்மொழி பன்மைத்துவ கலாசார நாடுகளில் பொறுமை, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை போன்ற பண்புகள் சமாதான சகவாழ்வுக்கு அத்தியாவசியமானவை. அன்றேல் அந்நாடுகள் ஒருபோதும் அமைதியான சுபீட்சமான நிலையை அனுபவிக்க மாட்டா. இலங்கையில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னரான தற்போதைய காலகட்டத்தில் பல்வகையான முரண்பாடுகள் மேற்கிளம்பிக் கொண்டிருக்கும் துரதிர்ஷ்டவசமான நிலைமையினை அவதானிக்க முடிகிறது. மேலும் பிளவுகளை விரிவுபடுத்தி துருவமயப்படுத்தும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன. புதிய புதிய வடிவங்களில் முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதன் மூலம் அடிப்படைப் பிரச்சினைகளை மூடிமறைக்க ஆதிக்க சக்திகளும் சுரண்டும் வர்க்கமும் பேரினவாத சக்திகளைத் தூண்ட முனைகின்றன. அல்லது அவற்றின் செயற்பாடுகளுக்கு துணைபோகின்றன என எண்ணத்தோன்றுகிறது. அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் வணக்கஸ்தலங்கள் மீதான தாக்குதல்கள், நீதித்துறை – நிறைவேற்று அதிகாரத்திற்கிடையான மோதல், 13வது திருத்த சட்டமூலம் நீக்கம் என்பன அந்தவகையில் நோக்கத்தக்கனவே.

மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கான காரணங்களை இனங்கண்டு, கொள்வதைத் தடுக்கு முகமாகவே காலந்தாழ்த்துதலும், புதிய புதிய பிரச்சினைகளை முன்மொழிதல்களும் நடைபெறுகின்றன என்பதை உற்று நோக்கும் எவரும் உணர்ந்து கொள்வர். இந்த இடைவெளிகளில் விலைவாசி எத்தனை மடங்கு உயர்ந்திருக்கின்றது என்னும் உண்மை நிலையை நின்று நிதானிப்போர் விளங்கிக் கொள்ள முடியும். அவர்கள் உண்மையில் இராஜதந்திரம் எனக் கருதிச் செயற்படுத்துபவை இறுதியில் அவதந்திரமாகவே முடியும்.

இவ்வகையான துர்பாக்கியமான சூழ்நிலைகளை இன,மத,மொழி பேதம் கடந்து படைப்பாளிகள் அம்பலப்படுத்த முன்வரவேண்டும். இது மானிடத்தை நேசிக்கின்ற படைப்பாளிகளால் மட்டுமே முடிகிற காரியம்.

மனித உணர்வுகளைப் பொதுமைப்படுத்தி மானுடம் ஒன்றுபட்டுச் செழிப்புறும் வண்ணம் எழுதுங்கள்.

**நீங்களும் எழுதலாம்**

**அன்புடன் ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்களும் உன் படைப்புக்கள்தானே!

எங்கள் நாட்டில், எங்களுக்கு
எல்லா உரிமைகளும் இருப்பதாக,
எங்களை ஆளும் அரசாங்கம்,
பாராளுமன்றத்திலும் பகிரங்க
மேடைகளிலும்
பறைசாத்திக் கொண்டிருக்கிறது.
அரசின் அப்பட்டமான பொய்களை
அணுப்பிசகாமல், ஊடகங்கள்
அப்படியே
உளறிக் கொண்டிருக்கின்றன.
நாங்கள் பறிக்கப்பட்ட எங்கள்
உரிமைகளை
சதா, அகதிமுகாம்களுக்குள்ளும்,
அழிக்கப்பட்ட எங்கள்
கிராமங்களுக்குள்ளும்
தேடிக் கொண்டே இருக்கிறோம்.
எங்கள் உதிரத்தில் குளிக்கும்
எட்டப்பர்கள்
நாங்கள் கோயில்களில் அரைத்து
வைத்த
சந்தனத்தை களவாக எடுத்து,
எங்கோ தடவிக் கொண்டு,
ஊளையிடுகின்றனர்.
மாற்றானின் பிச்சையில் மயங்கி,
கோயில்களில்
மந்திரம் ஓதுகின்றனர்.
நாங்கள் உரிமையோடு வாழ்ந்த
எங்கள் கிராமங்கள் எல்லாம்
சுடுகாடுகளாகி, கொடிய பேய்களின்
இருப்பிடங்களாகி விட்டன.
மண்ணுக்குள் புதைந்து விட்ட எங்கள்
அப்பாவி மக்களின் ஆத்மாக்கள்,
இரவும் பகலும், எங்கள் உரிமைக்காக
தேவனிடம் துதிப்பதைப் பார்த்துப்
பயந்து,
எட்டப்பர்களும், இனத் துவேசிகளும்
ஒழித்து விட்ட மானிடத்தை
உலகிக்கு அழைத்துவர ஓடுகின்றனர்.
எச்சில் இலைகளுக்கு ஏங்கித் திரியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குக்கல்கள், கடவாய்களை
நக்கித்திரிகின்றன.
எங்களோடு ஒழித்துக் கொண்டிருக்கும்
மானிடம், எட்டப்பர்களிடம் சேருமா?
பிணம் தின்னும் பேய்களின் தந்திரம்,
மானிடத்திடம் பலிக்குமா?
இறைவா! எங்கள் மண்ணில் நாங்கள்
உரிமையோடு சுதந்திரமாக வாழும்
வசந்தகாலம், எப்பொழுது வருமோ?
கொடிய அரக்கர்களின் கொடுமைகளை
காண வெறுத்து, மூடிய உன்
நேத்திரங்கள்
மீண்டும் என்று திறக்குமோ?
நாங்களும் உன் படைப்புகள் தானே!

-எஸ்.முத்துமீரான்-

## அழகோவியமே!....

வெண்புறா மேனியழகே!
வெண்நிலா முகமழகே!
விண்மீன் கண்ணழகே!
விண்முகில் உன் நகர்வழகே!

அன்ன நடை அழகே!
மின்னல் இடை அழகே!
கொஞ்சிப் பேசும் பேச்சழகே!
கொஞ்சும் உன் கவியழகே!

அழகே!....... அழகே!.... அழகே!
உன்னைப் பாட
கண்ணதாசன் இல்லையே!
கம்பனும் இல்லையே!

பிரம்மன் படைத்த அழகோவியமே!
உன்னை பத்துமாதம் சுமந்ததை விட
பாக்கியம் உண்டா உன் அன்னைக்கு
பார்ப்பவர் உள்ளம் பரவசமடைகின்றது

பிஞ்சு விரல் காட்டி
கஞ்ச நடை நடந்து
தஞ்சமாய் தாய்மடி விழுகையில்
விஞ்சிடும் அமிர்தசுரபி உன்
அன்னைக்கு!

**திருமதி.ஜெனீதா மோகன்,**

**நற்பிட்டிமுனை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயோதிபம்

கதவு மூடும் தொடர்போடு
இருண்டு விட்டது
என் அறை

படுக்கையில் கிடந்து
கருகிற்று – உன்
வரண்ட சிரசு

வார்த்தைகளை
உன் பாட்டுக்கு இருந்து
இறைப்பித்து
நூல்களை வாசித்து

ஒவ்வொரு பிறப்பிற்கான
உறக்கங்களிலிருந்து
விழித்து
அசிங்கங்களிலும்
அமர்ந்து வாழ்ந்து
குற்றம் சொல்லும் போதும்
அதை ஒப்புக் கொண்டு
தண்டனை இல்லாமல்
வயோதிப விதியில்
உனக்கு
நாட்களும் போகிறது

கட்டிலில் ஒழிந்து
கொள்வது போல
உறக்கம்
ஒவ்வொரு நிமிடத்திற்கும்
தண்ட வாளத்தில்
ரயில் கடந்து
போகும் சத்தம்

கை பதட்டம்
அவஸ்தை
வெப்பம்
சிறுநீர் ஒழுக்கு – என


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிறந்த
பகலிலெல்லாம்
ஏதும் ஒரு சுகமில்லை
உனக்கு

திறந்து கிடக்கும்
தொலைக்காட்சிப் பெட்டியில்
விநோத பெண் ராட்சசிகள்
உன் முன் தங்கள்
கண்களை திறந்திருக்கிறார்கள்

எல்லா அசைவுகளும்
உனக்கு மௌனமாகி
விட்ட பொழுதில்
உன் மகனும் உன்னை
பார்க்க அங்கே
வந்து விட்டான்.
நீமோவாய்க் கட்டையிலே
அவனை கண்டவுடன்
கை வைக்கிறாய்
அவன் சொல்வது எதுவும்
உனக்கு காதில் விழவே இல்லை

உன்னை அவன்
தன் வாயால்
கவ்வுகிறான்
இதை விட சீப்பான
ஒரு நாற்றப் பிரதேசத்தில்
உன்னை கொண்டுபோய் விட

**- றீ.பி. அருளானந்தம் -**

ஆக்கபூர்வமான கருத்துக்கள்,
விமர்சனங்கள்
வரவேற்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணம்

நான்
எதையும் செய்வேன்
என்னை
வாழ்வுடலில்
உயிர்மூச்சாய் சுமந்திருக்கும்
உங்களுக்காக

மானிட சமூகத்தில்
தவப்புதல்வனாக
நானிருக்கும் வரை
பலருக்கு இதயமிருக்காது

இறைவன்
என்னைப் படைத்தபோது
ஏது நினைத்தானோ
நானே மனிதன்
வணங்கத் தகுதியானேன்

கொலை கொள்ளை
கடத்தல் அரசியல்
என விரியும்
நவீன மாந்தரின்
உழைப்பு முதல்களில்
எனதழகு
காவல் துறையையும்
கட்டிவைத்து
கிறங்க வைக்கும்

போதுமென்ற மனமே
பொன்செய் மருந்தாய்
எனையேற்காதவரை
நான் தீயவன்

விரிக்கப்பட்டிருக்கும்
என மாயவலையில்
வீழ்த்தப்படுவோர்
வீணர்களே

ஆத்மீகக் காவலனின்
அடிச்சுவடுகளில்
தடம் பதியாமல்
என் கழுகுப் பார்வையில்
தப்ப முடியாது

-மருதூர் ஜமால்தீன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனல்

சிறு தறப்பான் குடிசையிலும்
திறந்த பொட்டல்
சமவெளிதனிலும்
உண்ண உடுக்க உறங்க
வழியின்றிக்
கதிகலங்கி அச்சமுடன்
ஏக்கப் பெருமூச்சோடு
வாழ வழியின்றி
வாடி நிற்கின்ற
ஏழை நெஞ்சங்களின் அடிவயிற்றில் எரியும்
சிறு தீயும்
உங்கள் வாழ்வில்
நிச்சயம் ஓர் நாள்
கனல் கக்கும்

-அக்கரை மாணிக்கவாசகம் -

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

## இலக்கையடைதல்

குதிரைச் சவாரி செய்பவர்கள்
மிகவும் பலசாலிகள்
விரையும் குதிரைகளோடு
காற்றைக் கிழித்து
செல்லக்கூடியவர்கள்
அவர்கள் குதிரைகளை
கடிவாளம் கொண்டு
கட்டுப்படுத்துகிறார்கள்

அங்கே
குதிரைகள் விரைகின்றன
வேகமாக நேர்த்தியாக
இலக்கை நோக்கியதாக
வீரர்கள் கடிவாளங்களை
இறுகப் பற்றிக் கொள்கிறார்கள்

கடிவாளம் இல்லாத வீரர்கள்
தரையில் புரளும் பொழுதுகளில்
அங்கே
வீரர்கள் இல்லாத குதிரைகள்
இலக்கை அடைந்தன.

தில்லைநாதன் பவித்ரன்,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம் மரணிப்பதில்லை

எப்பொழுதும் எதிர்கொள்ளத்
தயாராக இரு.

ஏனெனில்
எப்பொழுதாவது – அவை
வந்தே தீரும்.

எமதர்மராஜா
பாசக்கயிற்றோடு வந்து
நீ என்று,
நீ நினைக்கிற உன்னைக்
களவாடிப் போவார்,
அது கட்டாயம் நடக்கும்.

அதற்காக............
வழிபார்த்து........ எதிர்பார்த்து............
இருப்பதாலோ...............

வளைந்து......... நெளிந்து
மறைந்து கொள்வதாலோ........
தப்பிக்க முடியாது.

மற்றவரின் வாழ்வில்
மண்ணள்ளிப் போட்டுவிட்டு
தப்பிக்கலாமென்று மட்டும் நினைக்காதே.

துப்பாக்கி ரவை
எப்போது உன்னைத் துளைக்குமென்று
சொல்ல முடியாது

மச்சானோடு சேர்ந்து
மாமியும்.............
மாமியின் மகள் உன் மனைவியும்,
உன் பழைய காதலியும் கூட
கைவிட்டுப் போகலாம்
அழகு.............
அரை மணித்தியாலயத்திற்குள்
கருகி, கறுத்தும் போகும்
எப்போது வருமென்று எதிர்பார்த்து
சுத்தமாக இரு.

இது சுற்றவாளிகளைக்
குற்றவாளிகளாகச் சோடிக்கின்ற காலம்
சோடிக்கின்ற தேசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் வரை
சுத்தமாக விருந்தால்............
அயலிலுள்ள காற்றும்
தொட்டுப் பார்க்கப் பயப்படும்.

நாம்.........
நாமாக இருப்போம்
மனிதம்
ஒருநாளும் மரணிப்பதில்லை.

—நீலாபாலன்—

******************************

## விடுபடல்

கண்கள் கண்ட
அவலத்தைப் பாராது
வலுக்கட்டாயமாய் திசைதிரும்பின
முகங்கள் !
செவிகளுள் ஒலித்த
மரணத்தின் ஓலத்தை
உள் நுழைய விடாது
ஆன்மா இறுக்கின உணர்வுகள் !
அடிபட்டு —
அரையுயிராய்க் கிடந்தவனைப்
பார்த்தும்
அப்பால் சென்றன பாதங்கள்.
காருண்யத்துக்காய்
நிமிடமிழத்தலில் அவகாசமற்றுப்
போனது
மானுடம்!
விபத்தும், மரணமும்
நிகழ்களத்து விளிம்பில்
பிணமாய்ப் போனது நேயம் !
விலகிச் செல்லலும் விடுபடலும்
எதுவரை?
அநேகமானோர்
வரையறுத்துக் கொண்டோம்
இவ்வாழ்க்கைப் பாடத்தை !
நான் !
என் வாழ்வு
என் குடும்பம்
என் பிள்ளை
எம் இருப்பு !

—அஷ்ரபா நூர்தீன்—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ(தோ) கதி

அவுஸ்திரேலியா நாட்டில்
அகதியாய் வாழவென
ஆவலாய் ஏன் தான் ஓடுகின்றார்?
இவ்வுலக இன்பம்
எல்லாம் இருக்குதோ?
இருப்பதை விற்று
ஏன் தான் ஓடுகின்றார்?

பவ்வம் மார்க்கமாய்
பயணித் தென்ன
பக்கத்து வீட்டுக்குத்
தானும் இன்று
செவ்வனே செல்ல
மாட்டா தவராய்
செல்லுக்கு ஊகப்பட்டு
சீரழிகின்றாரே.

வானமது பொய்த்ததால்
வாழவழி அற்று
மானமது காக்கவென்று
மாற்றான் நாட்டிற்று
போனதாய் சொல்கின்றீர்
போக்கிடந் தேடியே
தானமாய் அவர்கள்
தருவது இனிக்குமோ?
பெருந்தனம் சேர்க்கவென்று
பேராசை கொண்டு
வருந்துன்பம் எண்ணாது வகையிது
செய்தீரா?
மருந்தொத்த பிள்ளைகளை
மாண்புடன் வளர்க்க
தருணமிதென்றெண்ணி தப்பாய்க்
கணித்தீரோ?

சொந்த நாட்டிலே
சோறோ கஞ்சியோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தல் உடயோ
கதர் சட்டையோ
பந்தமுட னுண்டு
பண்பா யுடுத்தி
சந்ததம் வாழும்
சந்தோசம் கிடைக்குமோ?

மாற்றான் நாட்டில் மண்டி இடலாமோ
மானம் இழந்து உண்டி
உண்ணலாமோ
வேணாம் நமக்கு அண்டிப் பிழைப்பு
மானமோ டிங்கு வாழ்ந்து மடிவோமே,

-நிலாவெளியூர் கெஜதர்மா-

*****************************

## தெருக்குரல்

நிலவும் கவலைகளை யோசித்துக் கொண்டே
இருப்பதுதான்.
உலக மாந்தர்க்கு பொழுதுபோக்கு

**********

கோபவெறியில் நியாயவாதியும் தலைமறந்து
பாவ வெறியர் ஆகிவிடுவர்.

**********

அமைதியென்பது இருபக்க வழியிலே அன்றி
அமையா தொரு வழியில்.

**********

அப்பா, ஆவதற்காக பெண்ணின் கழுத்தில்
தப்பாது தாலிகட்டுவதில்லை.

**********

பகுத்தறிவை மனிதனுக்கு மட்டும் கொடுத்த
ஆண்டவன்
முட்டாளை பார்த்துச் சிரியானோ

**********

-சூசைஎட்வேட்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கவிதை குலைகிறது

விண்ணகத்தின் வண்ணப் பறவைகள்
சிறகடிக்கின்றன......................
சிந்தனைப் புள்ளில் சிலிர்ப்புகள் கோடி
உதிர்கின்றன..........
கவிதை மலர்கின்றது
கண்களில் கனவு
ஒளிர்கின்றது...........
காலம்
இனிமையான ஒரு நவீனம் போல்
அசைகின்றது.

மார்கழிப் பனிபோல்
நெஞ்சைக் கவ்விய ஒரு குளிர்ச்சியில்
இதயம் மென்மையாகி
விம்முகின்றது..................

நாட்களின் அசைவு
திடீரென
உடைப்பெடுத்த வெள்ளமாய்ப்
போய்விடுகின்றது..................

இதயம் உடைகின்றது
உதிரம் பாய்கின்றது.
உள்ளம்
ஓலக்குரலெடுத்து அரற்றுகின்றது

இதயப் பூங்கனவுகளை
சோகமென்ற கருந்திரை மூடுகின்றது
ஒரு தாங்க முடியாத வெறுமை
துணையாய் வருகின்றது.

தோல்விகள் நெஞ்சில்
கனக்கின்றன........
துயரங்கள் நெஞ்சை
எரிக்கின்றன.........


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் என்ற பூ
மணமிழந்து காய்ந்து
சருகாகின்றது....

கட்டற்ற வாழ்க்கையோட்டம்
முட்டுவதும் மோதுவதுமாய்
உள்ளத்தைப்
படாத பாடு படுத்துகின்றது

காலம் சுழல்கின்றது
கவிதை குலைகின்றது.......
கருப்பொருள்
கண்ணில் மெல்ல மறையும்
ஒரு பிரமையில்
உள்ளக் குழந்தையின்
ஏக்கப் பெரு மூச்சுகள்
நீலவானில் நிறைகின்றன

நான்
என்னை இழக்கின்றேன்.........

-விஷ்வமித்திரன்-

*******************************

## நான்

நான்
ஒரு கோடிக் கவிதைகளால்
உலகம் போற்றும்
பெருங்கவிஞன் என நாமம்
பெற்றாலும் அஃது
ஒரு சொட்டு இரத்தத்தை
உரிமைப் போரில்
தருபவனின் புகழ்முன்னே
தூசு! தூசு!

(சுபத்திரன் (1935 - 1979)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனம் கேட்ட நியாயம் எல்லாம் பணம் கேட்டுப் போனதெங்கே

இல்லாத தொல்லை எல்லாம்
இல்வாழ்வில் தொடர்ந்த போதும்
பொல்லாத உரிமைக்காக- போய்
ஓழிந்த தேர்த லெல்லாம்
புரியாத உணர்வினாலே
போட்டோமே வாக்கு எல்லாம்

பொறுப்பான சபையை நாமும்
பொறுப்புகளை பகிர்ந்து ஏனும்
புதுக்கூட்டு செய்வோம் வாரீர்
போன துயர் வெல்வோம் வாரீர்
ஏனப்பொறு மையுடன் சொனனோம்தானே
சகோதரனே சொன்னோம் தானே ..

பொறுப்பில்லா சிந்தனையால்
வெறுப்பேற்றும் முடிவுதனை
வெறுமனே தொடர்ந்து மீண்டும்
எடுப்பதால் நொந்து போய்.
நாமும் அது தூக்கி
அழிக்க லாமோ?....
சி..அது வந்த பாதை தானோ...?
ஜனமில்லா நாயகத்தால்
ஜன நாயகமும் போனதெங்கே
ஜனம் கேட்ட நியாயமெல்லாம்
பணம் கேட்டுப்போனதேங்கே

பிணம் பார்த்தும்....
போகலையா ..? இனம்
பார்த்த பிசாசு இன்னும் ?

பொடியான உடல்களெல்லாம்
போன இடமில்லை எனினும்
மடியாத ஜீவனெல்லாம்
பொதுவாக கேட்டதிங்கு???

அட கைவந்து.... கானல்
ஆனதே என்னதான்........?????
கர்ணன் என்றாலும்
கருகுதே நெஞ்சமெல்லாம்
உருகுதே வெஞ்சத்தாலே

– திருமலையானந்தலிங்கம் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாயிரம்

படித்துப் பட்டம் பெற்றதனால்
பாதகம் எங்கும் நிகழ்ந்ததுண்டோ
நான் படித்த படிப்பெல்லாம்
நாசமாகிப் போனதுவோ
வான் பறந்த பட்டம் போல்
வாலறுந்து வீழ்ந்ததுவோ

பல்கலைக் கழகம் சென்றதனால்
பத்தாயிரம் சம்பளமோ
கல்விக் கல்லூரி சென்றுவந்த
தம்பி தங்கை யாவருக்கும்
இருபதாயிரம் வேதனமாம்
இனிய வாழ்வு வாழ்கின்றார்

பிரதேச செயலகப் பிரிவினிலே
பிள்ளை போலெமை நடத்திடுவோர்
தருவதில்லை மதிப்பெமக்கு
தரம் உயரும் நாள் எப்போ
மலை போல் ஏறிவருகின்ற
விலைக்கு ஈடு பத்தாயிரமோ

—தம்பிலுவில் ஜெகா—

******************************

**கவிதைக்கான**

***பயில்களம்***
***பரிசோதனைக்களம்***
***காத்திரத்தின்களம்***
***கருத்தாடற்களம்***
***விளக்கக்களம்***
***விமர்சனக்களம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்(கை)டை காலம்

பிழியப்பட்ட நினைவுடனும்
பலத்த எதிர்பார்ப்புக்களுடனும்
பயணிக்கிறாய் என் தேசத்தை நோக்கி !!
எனதூரின் நதிகளெல்லாம்
பிரியங்களாக வழிந்தோடுகின்றது
இருவருக்குமிடையில்

இனம் தெரியாத கவலையொன்று
ஊஞ்சலாடிக் கொண்டேயிருக்கும்
நான் நிழல் தேடும் மரங்களில்
மட்டுமே எப்போதும் இலையுதிர்காலங்கள்
மனம் உன்னை சுற்றியே
சிக்கல் விடுத்துக் கிடக்கின்றது
இருள் நீண்டு பெரும் மயானம்
சூழ்கொண்டுள்ளது
இங்கே, குளிரும், இல்லை, வெப்பமும்
இல்லை
கத்திக் கொண்டேயிருக்கும்
பூனையின் பசியும்
மறைந்து சிலிர்க்கும் மயிலின்
வனப்பும்
மரக்கிளையில் சல்லாபித்து, பின்
சொண்டுரசும் பெயர் தெரியாத
பறவைகளின் சலசலப்பும் மட்டுமே
எஞ்சியுள்ளது
உறைந்த வார்த்தைகளும்
உருவி கொன்றொழிக்கும்
உன் நினைவும் தவிர
வேறொன்றுமில்லை
கோபத்தீயில் உருகிய இரும்பு
இருவேறு தண்டவாளங்களானது

- எஸ்தர் விஜித் நந்தகுமார் -
திருமலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனனம்

காலைகளும் வந்தன
மாலைகளும் மறைந்தன
காலங்களும் வேகமாய்
காணாமல் போயின
ஏழை என்
இதயத்தில் மட்டும்
ஏக்கம் விட்டுப் போகவில்லை

வறுமை அகோர அரக்கனாய்
வசந்தத்தை சிறைபிடித்த
அந்த
வளமான வளர் பருவத்திலும்
சிறுதினையாய் கிடைத்த சில
உணவை
சின்னவன் உனக்கு மட்டும்
பெரும்மனமாய் ஊட்டிவிட்ட
அந்தப்
பெரும் பொழுதுகள் மட்டும்
வரும் போகும் நினைவுகளால்
வாட்டம் அளிக்கிறதே !
கிழிந்த கூரையின் கீழே
கழிந்த வாழ்க்கையிலும்
மலித்த இன்பங்கள்
அழிந்து போயினவே
இன்று
நலிந்த இதயமுமாய்
என்
நாடி நரம்புகளும்
வாடிப் போயினவே
உன்
வண்ண முகம் மட்டும்
வாடாமல் - என்
நெஞ்சத்து ஓவியமாய்
நினைவுகளால்
நிரப்புகின்றனவே

பிறப்பும் இறப்பும்
பீழை அல்லவே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பினில் பெருமை
பேச வேண்டுந்தான்
ஆயின்
இறப்பிலும் ஓர்
சிறப்பு வேண்டுமே !
ஆனால்
நீ
பறக்க முன்னே
பரிதாபகரமாக சிறகுகள்
பறிக்கப்பட்ட பட்சி ஆக்கப்பட்டாயே
மறக்க முடியுமா?
உன்
மனிதம் அழித்த மரணத்தை
அரக்கர்களிடம்
அகப்பட்டுக் கொண்ட
அந்த நிமிடங்களை
இரக்க மற்ற கொடுமையின்
உரக்கக் கேட்ட
மரண ஓலங்களை
மறக்க முடியவில்லை
ஆனாலும்
ஓர் உண்மை என்ன வென்றால்
நீ
இன்னும் இறக்கவில்லை
என்
நினைவுகளில் மட்டும்
ஜனனித்துக் கொண்டிருக்கிறாய்
மீண்டும் மீண்டும்

**சௌ. சந்திரகலா**

**கந்தளாய்**

அழகுற அட்சிட்டு உதவிய அஷ்ரா
அச்சகத்தினருக்கு நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியாவது ஒரு விதி செய்வோம்

தேடிவந்த பறவைகட்கும்
நாடி வந்த மனிதர்க்கும்
இன்னும் பல உயிர்கட்கும்
எரிகின்ற அக்கினிக்கும்
தரிப்பதற்கும் புசிப்பதற்கும்
என் கிளைகள் பயன்பட்டன
என்ற சேதியை யேனும்

அன்றொருநாள் எங்கோ ஓரிடத்தில்
சிறகு யிரி ஒன்று கனி தின்று
இங்கோர் நாள் இட்ட எச்சத்தில்
முளைவிட்டவன் நான் என்ற
வரலாற்றின் ஒரு துளியையேனும்

முன்னொரு பொழுதுகளில்
என்னைப் பேரம்பேசி
ஆயுதங்களுடன் நின்ற
அந்த கறுப்பு நிமிடங்களில் கூட
தாங்கள் ஆடைகளின் பின்புறத்தில்
என் இனத்தான் ஒருவனின்
உதிரத்தின் ஈரம் கசிந்திருந்தது
என்பதேனும்

அவர்கள் அடியோடு
தறித்து விட்டதாகக் கூறும்
அடிக்கட்டையில் என் உணர்வுகள்
உயிரோடிருந்து நான்
மீண்டும் மரமாவேன் என்பதேனும்

அவர்கள் அறிந்திருக்க மாட்டார்கள் நிச்சயமாக
ஆனாலும் நீங்கள்என் மனவலிகளின் ஓலங்களை
என் வரலாற்று நிமிடங்களை
என் ரணங்களை
அதற்கப்பாலும்
மனிதம் உள்ள மனிதர் என்பதால்

நீங்கள் அறிவீர்கள்
நிச்சமாக – ஆதலால்
இனியாவது ஒரு விதி செய்யுங்கள்
என்னைத் தறிக்க இருக்கும்
கொலைக் கோடரிகளுக்கு
எவ்விதத்திலும் இடம்கொடுப்பதில்லையென்று

– பெ.பத்மபிரஷன் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசித்து அறியும் அறிவு

விண்ணிலே சிறகுமுளைத்து(ப்)
பறந்து திரிந்தாலும்
மனிதா வாசிப்பதை நிறுத்திவிடாதே.
வீரப் புன்னகை காட்டி
நீயோ -
பெருமை கொண்டாலும்
வாசித்தறியும் அறிவு இன்றேல்
மாண்டு போகும்
மரத்திற்கு ஒப்பாவாய்
எறும்பைப் பார்
எதிர்காலத் தேவைக்காய்
உணவைச் சேமிக்கின்றது.
நாடோடி வாழ்வு வாழும்
மனிதர்களிடத்தே
அடிமை வாழ்வு நீங்கவில்லை.
சிந்திக்கும் மானுடம் -
சரித்திரம் படைத்து நிற்கும்
அறியாமை முட்களினால்
தீண்டப்படும் மனித இனம்
தடம்மாறிப் போய் அழிந்துவிடும்.
மனிதன் சிந்தையை இழக்கலாம்.
தோல்விமேல் தோல்வி பெறலாம்.
பூமிப்பந்தின் சுழற்சியினால்
மாற்றம் பெறலாம்.
மாறாக மனிதத்தை இழக்காமல்
இருக்க வேண்டுமாயின்
மாறிவரும் உலகில்
அறிவைத்தேடியபடியே
இதயம் திறந்தபடியே
வாசிப்போம் -
வாழ்க்கையானது
திறந்து வைத்த புத்தகம் போன்றது
வேற்றுக்கிரகத்திற்கப்பால்
விரிந்து கிடப்பது.
சத்தமில்லாத படியே
சாதனை செய்வது -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தவர்களின் வரலாறு.
வாழ்பவர்களுக்கு
பாடமாய் அமைந்தது
பூவுலகில் உயர்ந்த தேசங்கள்
சிந்தனையால் முட்டியபடியே
உயர்ந்து போகின்றன -
வாழ்பவர்களே
சரித்திரத்தின் புத்திரர்கள்
அறிவைத்தேடாதோர்
அகிலத்திற்கே பாரமானவர்
விளக்கிலிருந்து ஒளி பிறப்பெடுப்பதுபோல்
வாசிப்பிலிருந்தே
புதிய சரித்திரம் தோன்றும்.

- க. யோகானந்தன் -
திருமலை

********************************

# மனத்தேசம்

கண்ணகியே கண்ணகியே
கண்ணைத் திறந்து பார்த்திடம்மா - எம்
பெண்கள்
ஒவ்வொரு கைகளிலும்
ஒவ்வோர் சிலம்பு இருக்குதம்மா

சிலம்புக்குள்ளே இருப்பதெல்லாம்
மாணிக்கமோ முத்தோ அல்ல
எம்மவரின் கவலைகளில்
கண்ணீர் தந்த முத்துக்களே

தந்தையிற்காய் கணவருக்காய்
மகளுக்காய் அழுத கண்ணீர்
செந்தழலில் எரித்தாலும் வற்றாத
ஊற்றுக் கண்ணீர்

எரியுதம்மா எரியுதம்மா
இன்னும் எரியுதம்மா
நீதி மறுத்த தேசமல்ல
மறுக்கப்பட்ட எம் மனத் தேசம்

- ச. சுகரிணன் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபெயர்ப்புக் கவிதை

# உரிமைகட்காய் போராடுங்கள்

வீரப்பதி விநோதன்,
வவுனியா

உங்கள் உரிமைகட்காய்
எழுமின் எழுமின்!
புறப்பட்டு எழுமின்!

சொர்க்கமானது பூமிக்குக் கீழ்
உள்ளதாக
மதபோதகர் எனக்குக் கூறவில்லை
இந்த வாழ்வின் பெறுமதி பற்றி
உனக்குப் புரியாதவை
எனக்குப் புரிகிறது.
மின்னுவதெல்லாம் பொன்னல்ல
வாழ்வின் பாதிப்பகுதியில்
இருள் கவிந்திருந்ததனால் - நீங்கள்
இப்போது வெளிச்சத்தைக்
காண்கிறீர்கள்.

வானத்திலிருந்து ஒரு வாழ்வு
வருமென
பெருமளவு பேர் நம்புகிறார்கள்
ஒவ்வொன்றையும்
அம்பலப்படுத்துங்கள்!
ஒவ்வொருவரையும்
உணர்வுள்ளவராக்குங்கள்

வாழ்வு பெறுமதி உள்ளது என்பதை
தெரிந்து கொண்டால் - நீங்கள்
உலகில் உங்களுக்கென
உள்ளவற்றை
நிச்சயம் காண்பீர்கள் - ஆதலின்
எழுமின் எழுமின்
உரிமைகட்காய் எழுமின்

ஆங்கிலத்தில் - **Bob marley**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்களும் எழுதலாம் முகவரிகள்

**ஆர்த்திகா விஜயலிங்கம்**



நீங்களும் எழுதலாம் இதழ் 2ல் 'ஐந்தெழுத்து' என்னும் கவிதையை எழுதியதன் ஊடாக இலக்கிய உலகில் பிரவேசித்த வி.ஆர்த்திகா தி/சண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவியாவார். 2011ல் க.பொ.த உயர்தர கணித பிரிவில் சித்தியடைந்து பொறியியல் துறைக்கு தெரிவாகியுள்ள இவர் தொடர்ந்தும் கடவுளுக்காக சுனாமி சாகாதவரம் ஆகிய கவிதைகளை எழுதியதன் ஊடாக 'நீங்களும் எழுதலாம் முகவரியில் அறிமுகமாகிறார்.

## சார்புக் கோட்பாடு

மழலையில் பெற்றோரிடம்
சிறு வயதில் பொம்மைகளிடம்
பருவவயதில் தோழிகளிடம்
திருமண வயதில் கணவனிடம்
முதிர்ந்த வயதில் பிள்ளைகளிடம்
இறந்தபின் .........

இறுதியில்
தனியாகச் செல்வதற்கு
இத்தனை
சார்புக் கொள்கை மாற்றங்கள்!

ஐன்ஸ்டைனின் சார்புக் கொள்கையே
ஆட்டம் காணும்போது
நம் சார்புக் கோட்பாடு மட்டும்
எந்தளவில்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டதும் காதல்

எனைப் பார்த்த மழைநாள் இரவு
இன்னும் பசுமையாய்
என் மனக் கண்ணில்....
மின்னல் கண்டு
தாழம் பூ மலர்கையிலே
என் கண்களில்
மலர்ந்த உன் முகத்தை
அன்றே எண்ணினேன்
என்னவளின் முகத்திற்கு
'டோர்ச்' அடித்துச் சென்ற மின்னலுக்காக
தாழம்பூவை
வீட்டில் வளர்க்க வேண்டுமென்று
காதலித்த ஐந்து நாட்களின் பின்
அவன் வரைந்த கவி மடல்!
திருமணமாகி ஐந்து வருடங்களில்
மின்னலைக் கண்டு
தாழம்பூ மட்டும் மலர்கிறது
அவன்முகம் மட்டும் இருள்கின்றது
ஐந்து மாதங்களுக்கு முன்
நடந்த விபத்தில் சிதைந்து
கோரமான என்முகத்தைப் பார்த்த!

-வி. ஆர்த்திகா-

*****************************

## மௌனம்

இதயத்தின் மொழிகளை
இதயத்தால் மட்டுமே
உணரக் கூடியது
மௌனம்
கணிகளின்மொழிகளை
கண்களால் மட்டுமே
உணரக் கூடியது
மௌனம்
'ஊனம்' என்று
பரிகசிக்கும் மக்கள்
ஏனோ புரிந்து கொள்ளவில்லை
அந்த மௌனமான ஊமை மொழிகளை

க. தீபிகா
தி/சண்முகா இ.ம.கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் கொடுத்த விலை

எலும்பு பொறுக்கிய
மண்ணில் இன்று
இரும்பு பொறுக்கும்
இதயங்களே
தங்கம் தேடும் தகடுகளே
ஒருமுறையேனும்
எண்ணிப் பார்த்தீரா
நாங்கள் கொடுத்த
விலைகளை
மறுவளமாய்
எதற்காய் இதை
தாட்டு வைத்துச்
சென்றீர்கள்
உங்கள் தாகமும்
இது தானோ
தோண்டி எடுத்தும்
யாருக்கோ
கொடுக்கையிலே
புரிகிறது
நாங்கள் கொடுத்த
விலையின் பெறுமதி

- புலோலியூர் வேல்நந்தன் -

வாசகர்களே
"நீங்களும் எழுதலாம்" இதழின் வளர்ச்சிக்கும், தொடர்ச்சிக்கும் உங்களது ஆதரவை எதிர்பார்க்கின்றோம். சந்தாதாரர் ஆவலோடு உங்களது நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்தி உதவுங்கள். அன்பளிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கவிதை சம்பந்தமான குறிப்புக்கள், கட்டுரைகள் விமர்சனங்கள் போன்ற பல்வேறு விடயங்களோடு மொழி பெயர்ப்புக் கவிதைகளும் உங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'இணை' யம்**

பிள்ளைக்கு படிக்க 'இன்டர் - நெற்று'
பூட்டினார் தந்தை கடன் - பட்டு
'பேஸ்புக்கில்' சட்டடித்து
பாஸ்போட்டும் முடித்தெடுத்து
பறந்தாள் மகள் தகப்பனை - விட்டு

**பாட்டு**

கனடாவாழ் காதலருக்கும் - பாட்டு
கண்டறியா நேயருக்கும் - கேட்டு
கலையுலக நண்பருடன்
கல கல..... கதைத்திருக்க
காசு கரைய கடனுக்கு 'ரீ- லோட்டு'

**காரியம் வெல்ல**

அமைச்சில் பணிப்பாளர்- உள்ளார்
அகடம் செய்வதில் - வல்லார்
அவருக்கு அன்பளிப்பு
அகலமான என்வலப்பு
அளித்தால் எக்காரியமும் -வெல்வார்

**புண்ணியம்**

புரட்டிப் பணம் சேர்த்து - வெச்சு
புண்ணிய பயணம் போனார் - ஹஜ்ஜிற்கு
பணமிருந்தால் பரமதரிசனம்
பிணமானால் மோட்சலோகம்
பத்துக் குமருடன் பக்கத்து வீடோ- குச்சு.

**விழல்**

இலக்கியத்தில் புரிந்துவிட்டநற் -சேவை
இருக்கையில் புகழ்வதுதான் - தேவை
இருக்கையில் மறந்துவிட்டு
இறந்தபின் புகழ்வோர்தம்
இழுத்துப் பிடுங்கல் வேண்டும் -நாவை

**தீரன். ஆர். எம். நௌஸாத்**

(அடுத்த இதழிலும் குறும்பா(க) ப் பாடும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகக் குறிப்பு

**வதிரி.சி.ரவீந்திரனின்**

# மீண்டு வந்த நாட்கள்

(கவிதைத் தொகுதி)

வதிரி.சி. ரவீந்திரனிடத்தில் இயல்பாகவே ஒரு கவிதையுள்ளம் இருக்கின்றது.... பிறர் ஈனநிலை கண்டு துள்ளுவதும் பொய்மையையும் போலித்தனத்தையும் கண்டு எள்ளுவதும், சமூகக் கொடுமை கண்டு சாடுவதும், ஏழ்மை கண்டு இரங்குவதும் கடந்து போன வசந்தத்தை எண்ணி ஏங்குவதும் அவரது இதயத்தின் இயல்புகளாக இருந்து வருவதனை அவரது கவிதைகள் உணர்த்துகின்றன. அவரது கவிதைகளின் தனிச்சிறப்பு சாதாரண பொது மக்களும் விளங்கிக் கொள்ளத் தகுந்ததாக எளிமையும், சற்று நுனிந்து நோக்குபவர்களுக்கு ஆழமான பொருளைத் தரவல்லவைகளாக இருப்பதுமே எனலாம்."




என அணித்துரையில் தெணியான் குறிப்பிடுவதைப் போல "வாசகனுக்குப் புரியும்படியாக எழுத்துக்கள் படைக்கப்பட வேண்டும். அந்தவகையில் எனது கவிதைகளை எல்லோர்க்கும் புரியும்படியாக வடித்துள்ளேன்" என ஆசிரியர் குறிப்பிடுவதும் கவிதைபற்றிய அவரது நோக்கத்தை தெளிவுபடுத்துகின்றது.

இது இறுதியாக 'பொறிகள்' என்ற தொகுப்பினூடாக 1974ல் பல புதுக்கவிதையாளர்களை அறிமுகம் செய்த அன்பு ஜவஹர்ஷா அவர்களின் நேசவுரை தொகுப்பை நிறைக்கின்றது. ரவீந்திரனிடமிருந்து இன்னும் எதிர்பார்ப்போம்.

தொடர்பு :-
568/2/1, அளுத்மாவத்தை வீதி,
கொழும்பு - 15
T.P : 0773128378

விலை :- 250/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிரேஷ்ட ஊடகவியலாளர்**
**வாழ்நாள் சாதனையாளர்**
**கலாபூஷணம்**
**சின்னையா குருநாதன்**
**பாராட்டு நிகழ்வு.**

திருகோணமலை கலை இலக்கிய ஊடக, கல்விச் சமூகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந் நிகழ்வு தி/கோணேஸ்வரா இ.கல்லூரியில் 18.03.2012 இல் சிரேஷ்ட சட்டத்தரணி ஆ.ஜெகசோதி தலைமையில் இடம் பெற்றது. ஆசியுரைகளை வேதாகமாமணி பிரம்மஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்கள் (ஸ்ரீ.பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்) அருட்பணி வீ.யோகேஸ்வரன் (சட்டத்தரணி, மனித உரிமைகள் அமைப்பு) ஆகியோர் நிகழ்த்தினர். வரவேற்புரையினை நீங்களும் எழுதலாம் ஆசிரியர் எஸ். ஆர் .தனபாலசிங்கம் ஆற்ற சிரேஷ்ட ஊடகவியலாளர் பொ.சற்சிவானந்தம் நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார். பாராட்டுரைகளை நகரபிதா க.செல்வராசா, கேணிப்பித்தன் ச.அருளானந்தம், சி.தண்டாயுதபாணி (சிரேஷ்ட நிபுணத்துவ ஆலோசகர் GTZ) ஆகியோர் ஆற்றினர். வாழ்த்துமடலினை ஊடகவியலாளர் சேனையூர் அ.அச்சுதன் வாசிக்க, ஓய்வுபெற்ற அதிபர் நா.இராஜநாதன் வழங்கி வைத்தார். பொற்கிழியினை ஆ.ஜெகசோதி வழங்கி வைக்க, நடன நிகழ்வும் இடம் பெற்றது. பல்கலைக்கழக மாணவர்கள் ஊடக சாகரம் விருது வழங்கிக் கௌரவித்தனர். சி.குருநாதன் அவர்களின் ஏற்புரை ஆற்றினார். கோணேஸ்வரா பிரதி அதிபர் எஸ்.பத்மசீலன் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தலைமை : ஆ. ஜெகசோதி
(சிரேஷ்ட சட்டத்தரணி)



எஸ்.ஆர்.தனபாலசிங்கம், பொ.சற்சிவானந்தம், திருமதி. குருநாதன், சி.குருநாதன், நா. இராஜநாதன், எஸ்.பத்மசீலன், அ. அச்சுதன்



குருநாதன் தம்பதிகள்.
பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக்குருக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ரபா நூர்தீனின்
ஆகக் குறைந்த பட்சம்.......!
கவிதை நூல் வெளியீட்டு விழா

'நீங்களும் எழுதலாம்' வெளியீடான இந்நூலின் வெளியீட்டு நிகழ்வு 15.07.2012 இல் தி/பெருந்தெரு விக்னேஸ்வர ம.வியில் 'நீங்களும் எழுதலாம்' ஆசிரியர் எஸ்.ஆர். தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது. சிறப்பு விருந்தினர்களாக விக்னேஸ்வரா அதிபர் சி.மதியழகன், சேவைக்கால ஆலோசகர் ர.இமாசலாகுமாரி, ஆகியோர் கலந்து கொண்டனர். அறிமுகவுரையினை திருகோணமலை கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் திருமலை நவம் நிகழ்த்த மதிப்பீட்டுரையினை சட்டத்தரணியும், கவிஞருமான கிண்ணியா எம்.சி.சபருள்ளா ஆற்றினார். முதற்பிரதியினை இலங்கை வங்கியின் நிறைவேற்று அதிகாரி கி.முரளிதரன், சிறப்புப் பிரதியினை மூத்த எழுத்தாளர் ஓட்டமாவடி S.L.M ஹனிபா ஆகியோர் பெற்றுக் கொண்டனர். ஏற்புரையினை நூலாசிரியர் அஷ்ரபா நூர்தீன் நிகழ்த்தினார். செல்வன் பெ.பத்மபிரஷன் நன்றியுரையாற்றினார்.




எஸ்.ஆர்.தனபாலசிங்கம், ர.இமாசலாகுமாரி, சீ.மதியழகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



S.L.M.ஹனிபா, அஷ்ரபாநூர்தீன்



திருமலை நவம்



கி.முரளிதரன். அஷ்ரபாநூர்தீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனையூர் அ. அச்சுதனின்
எங்களையும் இந்த மண்ணில்
மனிதராக வாழவிடுங்கள்"
(கட்டுரை நூல்)

வெளியீட்டு நிகழ்வு. நீங்களும் எழுதலாம் ஆசிரியர் எஸ்.அர்தனபாலசிங்கம் தலைமையில் 09.08.2012 இல் நகரசபை நூலக கேட்போர் கூட மண்டபத்தில் இடம் பெற்றது. பிரதம விருந்தினராக




முன்னாள்பா.உ. க.துரைரெட்ணசிங்கம் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக நகரபிதா க.செல்வராசா சிவஸ்ரீ என.ஹரிஓம் செல்வரெத்தினம் குருக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். ஆசியுரையினை வேதாகமாமணி பிரம்மஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்கள் வழங்கியதோடு முதற்பிரதியும் பெற்றுக் கொண்டார். நூல் மதிப்பீட்டுரையினை தி/செல்வநாயகபுரம் இ.ம.வி அதிபர் க.பேரானந்தம் ஆற்றினார். நூலாசிரியர் ஏற்புரை வழங்கினார். நிகழ்வுகளை கவிஞர் தி.பவித்ரன் தொகுத்து வழங்கினார். பெ.பத்மபிரஷன் நன்றியுரை ஆற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌர்ணமி தின நிகழ்வுகள்

07.02.2012

- அரபு தேசத்தின் மீள் எழுச்சி

ஜனாப் எம்.எஸ்.எம். நியாஸ்.

நேயம், குரல் ஆசிரியர்

திரு.யதீந்திரா (அரசியல் பத்தி எழுத்தாளர்)

- கவியரங்கு
வெளிச்சம் எமக்கு வெளியே இல்லை.

05.04.2012

- ஜெனிவாத் தீர்மானத்தின் பின்னரான இலங்கை சமூகங்களின் குறிப்பாக தமிழர்களின் உணர்வலைகள்
சிரேஷ்ட ஊடகவியலாளர் பொ.சற்சிவானந்தம்

03.07.2012

- கவியரங்கு
மானிடமும் மதமும்
மானிடமும் இனமும்
மானிடமும் மொழியும்
மானிடமும் தேசமும்.

29.09.2012

- கவியரங்கு

இனியாவது ஒருவிதி செய்வோம்
தலைமை - நிலாவெளியூர், கெஜதர்மா.

**களங்களை விரித்துள்ளோம்**
**ஆக்கங்களை அனுப்புங்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'திரு'வுடையாயார் ஆடல்

தம் பாதையிலே இல்லாதவரை
பெரும்பாடுபட்டு
தம் வழிக்கு இழுக்க
அல்லற்பட்டார்
நாசங்கள் அனைத்தும்
அதனாலென நம்பவைத்தார்.

தட்டுங்கள் மெதுவாக!
திறக்கின்றோம்.
கேளுங்கள் மெதுவாக!
தருகின்றோம்!
கதையளந்தார்....
நிலை குலைந்து போகையில்
நியாயங்கள் பல சொல்லி
பணியுமாப் போலவும் செய்தார்.

நாடுகளின் உதவி நாடி
ஏடுகள் உரையா நெறிமுறையில்
கோரப் பிரளயத்தை
ஆக்கியதன் பின்
அவலத்தை விழாவாக்கி
அழிவை முதலாக்கி
பிழையைச் சரியெனச் செய்யும்
வித்தை புரிகின்றார்.

அழுதபிள்ளை பால் குடிக்கும்
அடம்பிடிக்கா வீணரிடம்
ஏன் வீண்வாதம்
நந்திக் கடலுடன்
முடிந்த கதைக்கு!

கேட்கட்டும்! கெஞ்சட்டும்!
தலை தடவட்டும் !
காலில் விழட்டும்!
என்றபடி.....
திரைவிலகாத் திருவிளையாடல்
தொடர்கையிலும் .....

இன்றோ நாளையோ....
இன்னும் பூச்சாண்டி காட்டி
தம் பெருமையுரைத்து
பிளவுகளை உண்டாக்கி
தம்பட்டம் அடித்து மகிழ்கின்ற
இந்த இழிநிலையோ
இன்னும் எத்தனை காலம் தான்?

-எஸ்.ஆர் .தனபாலசிங்கம் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கப்பெற்றவை

## "இன்னுமோர் உலகம்"

(சிறுகதைத் தொகுதி)

கொற்றை பி.கிருஷ்ணானந்தன்



"..... ஒரே பாணியில் வெளிப்படுவனவாகவும் உற்பத்திக் கதைகளாகவும் அமைந்துவிடுகின்ற இத்தகைய ஆரோக்கியமற்ற சூழலில் இத்தொகுப்பிலுள்ள சிறுகதைகள் பலவும் மேற்கூறிய செல்நெறிகளிலிருந்து சற்று விலகி வித்தியாசமான புதிய உள்ளடக்கங்களைக் கொண்டனவாக விளங்குகின்றன. பழைய விடயங்களெனில் அவை வித்தியாசமான - புதிய - பார்வைக்குட்படுவனவாக வெளிப்படுகின்றன.

அணிந்துரையில் : பேராசிரியர் செ. யோகராசா

தொடர்பு: 'பிள்ளை நிலா", கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை

விலை - 250/-

*******************************

## "நிமிர்வு"

(சிறுகதைத் தொகுதி)

-அநாதரட்சகன்-



"...... எது எவ்வாறாயினும் இத்தொகுப்பு அவரது ஆளுமை வளர்ச்சியின் பல்பரிமாணங்களை எடுத்துக் காட்டுவதாகவே அமைந்திருக்கின்றன. அநாதரட்சகன் வடிவப் பரிசோதனையில் அதிகம் அக்கறை காட்டுபவரல்ல பாரம்பரியமான சிறுகதை வடிவத்தைக் கையாண்டு தன் கண்ணெதிரே உறுத்திக் கொண்டிருக்கும் வாழ்க்கையின் குரூரங்களையும், அவலங்களையும் மனசை பிழியும் துன்பக் காட்சிகளையும் படைப்பாக்கியிருக்கின்றார்"

அணிந்துரையில் : லெனின் மதிவானம்

தொடர்பு : 39/6, முதலாம் ஒழுங்கை, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர்

விலை - 300/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடைகளைத் தகர்த்து

தகவுகளைத் தேடி

வெடி அமுக்கப்பட்டிருக்கிறது – அது
வெடிக்கும் போதுதான் தெரியும்
உள்ளே இருந்தது இந்தளவா
உற்றுப் பார்ப்போர்
அதிர்வடையும் நிலை
அறிய வேண்டி நிற்பர்
இரண்டு பதினொன்று இனிதே
இரட்டிப் போசையுடன்
வெளிவந்ததே வாழ்த்துக்கள்

**ம.கணேசலிங்கம்,**
**திணைப்புனம், அல்வாய்**

**********************

நீண்ட காலமாகத் தங்களுக்குக் கடிதம் எழுதவேண்டும் என எண்ணியிருந்தேன் வேலைப்பளு காரணமாகத் தாமதித்தது.

'நீங்களும் எழுதலாம்' இதழ்கள் சிலவற்றை நண்பர்களிடம் வாங்கிப் படித்தேன். அவற்றின் தரம் கண்டு வியந்தேன். கைக்கடக்கமான இதழில் அத்தனையும் முத்துக்கள், தங்கள் பணி தொடர வாழ்த்துக்கள்.

S.M.M.றபீக்
கல்முனை - 12

**********************

புனைபெயரில் எழுதுவோர் தமது
சொந்தப் பெயர், முகவரியையும்
குறிப்பிடுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமும் பெயர்ப்பும்

# DARKNESS

***Bilquis Zafirul Hasan***

The darkness prevails only because

You did not light a candle, yet.

Do no sit idly
Light a candle - see for the fuse
Possibly, the electricity has gone

Because the wire is fused
Then - change the fuse-wire.

If you do not know, how to make fuse-
wire - then
Sit frightened in this dim light of a candle
And pray for the morrow to come.
Sit for all night in this darkness.

Do remember - the darkness is
Only a name of no light.
Bring light and see - where does the
darkness go?

மூலம் பில்கிஜ் ZFருல் ஹஸன்

**************

அறிமுகக் குறிப்பில் உங்களது கவிதைத் தொகுப்பு இடம்பெற வேண்டுமாயின் ஒரு பிரதியை அனுப்பி வையுங்கள். 2009ற்கு முன் வெளியானவை அறிமுகக் குறிப்பில் இடம்பெறமாட்டாது.

"நீங்களும் எழுதலாம்" கிடைக்குமிடங்கள்
பூபாலசிங்கம், வெள்ளவத்தை,
கொழும்பு - 06
புக்லாப் புத்தகசாலை, யாழ் பல்கலைக்கழக
அருகாமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருள்

நீ இன்னமும் ஒரு மெழுகுதிரியை ஏற்றாததாலே
தான்
இருள் நிலவுகிறது.
சோம்பிக் கிடவாதே
ஒரு மெழுகுதிரியை ஏற்று – ஃபியூஸ் கம்பியைத் தேடு
பெரும்பாலும், கம்பி உருகியதால்
மின்சாரம் போயிருக்கலாம்
அப்படியெனில் – ஃபியூஸ் கம்பியை மாற்று.

ஃபியூஸ் கம்பியைச் செய்யத் தெரியாவிடின்
மெழுகுதிரியின் மங்கிய ஒளியில் அஞ்சிக் கிடந்து
அடுத்த நாளின் வருகைக்காய் பிரார்த்தி.
முழு இரவுக்கும் இந்த இருளிற் குந்தியிரு.

நினைவில் வை – இருளென்பது
ஒளியின்மையின் ஒரு பேர் மட்டுமே
ஒளியைக் கொண்டுவந்து பார் – இருள் எங்கே
போய் விடுகிறது?

(1.9.1938இல் பிறந்த ஹஸன் டில்லியில் வாழும் உருதுக் கவிஞர்)

பெயர்ப்பு: **சி. சிவசேகரம்**

---

**வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்**
**வருட சந்தா 200/=**
R. Thanabalasingam
A/C No: 106653402077
Sampath Bank, Trincomalee.
**என வைப்பிட்டு பற்றுச்சீட்டை அனுப்பி வைக்கவும்**
**வெளிநாடு** US $10

---

**ISSN.1800-3311**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org